# தொலைதூர
# விடுதலைச் சுவடுகள்



நாதன்



கஜன்

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தலைமைச் செயலகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்
04.11.1996

பாரிஸ் நகரிலுள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அனைத்துலகத் தலைமையகத்தின் முக்கிய பொறுப்பாளர்களாகப் பணிபுரிந்த திரு. கந்தையா பேரின்பநாதன் (நாதன்) திரு. கந்தையா கஜேந்திரன் (கஜன்) ஆகிய எமது உறுப்பினர்கள் இருவர் பகைவனின் சூழ்ச்சியால் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வை அறிந்து நான் ஆழ்ந்த கவலையும் வேதனையும் அடைகிறேன்.

திரு. நாதன் எமது விடுதலை இயக்கத்தின் ஒரு மூத்த உறுப்பினர். நேர்மையும் கண்ணியமும் மிக்கவர். விடுதலை இலட்சியத்தில் அசையாத உறுதி கொண்டவர். நீண்டகாலமாக சர்வதேச நிதி திரட்டும் பெரும் பொறுப்பைச் சுமந்து, உலகெங்கும் அலைந்து அயராது உழைத்தவர். கடும் உழைப்பாலும், செயற் திறனினாலும் தமிழீழ விடுதலைப் போருக்கு அவர் ஆற்றிய பணி அளப்பரியது.

திரு. கஜன் எமது இயக்கத்தின் பரப்புரைச் செயற்பாட்டாளராகப் பணிபுரிந்தவர். தாயக விடுதலையில் ஆழமான பற்றுடையவர். ஈழமுரசின் ஆசிரியராகப் பணியாற்றி எமது இலட்சியப் போருக்கு ஆதரவு திரட்டுவதில் அருந்தொண்டு புரிந்தவர்.

நிதி சேகரிப்பு, பரப்புரை போன்ற முக்கிய சர்வதேசப் பணிகளில் ஈடுபட்டிருந்த இரு முக்கிய பொறுப்பாளர்கள் கொலையுண்டமை எமது இயக்கத்திற்கு மட்டுமன்றி எமது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும் ஏற்பட்ட பெரிய இழப்பாகும்.

பரந்து வளர்ந்து உலகெங்கும் கிளை பரப்பி நிற்கும் எமது விடுதலை இயக்கத்தின் சர்வதேசக் கட்டமைப்பினை சீர்குலைத்து அனைத்துலக ரீதியாக எமக்கு அணிதிரளும் ஆதரவை முறியடிப்பதற்காக சிங்கள இனவாத அரசு தீவிரமாக திட்டமிட்டு செயற்பட்டு வருவது உலகறிந்த உண்மை. வெளிநாடுகளில் எமது இயக்கத்தை தடைசெய்து, சர்வதேச தமிழர் சமூகத்திடமிருந்து பெறப்படும் நிதிப்பங்களிப்பை முடக்கி, ஈழத்தமிழரின் சுதந்திர இயக்கத்தை நசுக்கிவிட சந்திரிகா அரசு பகிரங்கமாக பகீரத முயற்சி செய்கின்றது. சிறீலங்கா அரசின் வெளிநாட்டு இராஜதந்திர நடவடிக்கைகள் இந்த நோக்கங்களைக் கொண்டவை என்பது சர்வதேச சமூகத்திற்குத் தெரிந்த விடயம். இந்த இராஜதந்திர முயற்சிகள் பலனளிக்காது போகவே சிறீலங்கா அரசு நாசகாரச் சூழ்ச்சியில் இறங்கியிருக்கிறது. இந்தச் சூழ்ச்சியின் கோரமான வடிவமாகவே இந்தக் கொலைகள் நடைபெற்றதென நாம் நம்புகிறோம்.

தமிழருக்கு எதிரான சிறீலங்கா ஆட்சியாளரின் அரச பயங்கரவாதம் இப்பொழுது கடல் கடந்து சென்று சர்வதேச அரங்கில் மேடையேறியிருக்கிறது. இதன் அரூப கரங்களால் எமது அன்புக்குரியவர்கள் அநியாயமாக உயிர்நீத்துள்ளனர். இக் கோழைத்தனமான செயலின் சூத்திரதாரிகள் யார் என்பதை சர்வதேச உலகம் இனம் கண்டு கொள்ளவேண்டும். அப்பொழுதுதான், சர்வதேச

Tamileelam Archive

சட்டங்களையும், மனித உரிமைகளையும் மீறும் பயங்கரவாதிகள் யார் என்ற உண்மை உலகத்திற்குப் புலனாகும்.

எதிரியின் கையாலாகத்தனத்தின் அசிங்கமான வெளிப்பாடாகவே நாம் இந்தப் படுகொலைகளைக் கருதுகிறோம். எமது போராட்டத்திற்கு ஆதரவு நல்கும் உலகத் தமிழ் சமூகத்திற்கு விடப்பட்ட ஒரு சவால் இது. எதிரியின் இச் சவாலை துணிவுடன் எதிர்கொண்டு தாயக விடுதலைக்குத் தொடர்ந்தும் உறுதியுடன் பணியாற்றுமாறு உலகத் தமிழர்களை நான் வேண்டுகிறேன்.

மிகவும் சோதனையான இக்கால கட்டத்தில், நெஞ்சத்தை உலுப்பும் வேதனைகளையும் நாம் சுமந்துநின்று, மிகவும், நிதானமாக, மிகவும் விழிப்பாக, உறுதி தளராது எமது இலட்சியப் பணியைத் தொடரவேண்டும்.

தாயக விடுதலை என்ற உயரிய இலட்சியத்திற்காக, அயராது உழைத்து, தமது இன்னுயிரை அர்ப்பணித்த இலட்சிய வீரர்களுக்கு எமது இதய அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

**வே. பிரபாகரன்**
தலைவர்
தமிழீழ விடுதலைப் புலிகள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# நாதன், கஜன்:
## ஆன்ம விடுதலை பெற்ற கர்மவீரர்

நாதனும், கஜனும் இரு சக்திகளாக இயங்கியவர்கள். இறக்கை முளைத்து வானில் பறப்பவர்களாக அவர்களது செயல்களில் வேகம் இருந்தது. கருமமே கண்ணாக – செயல்வீரர்களாக மிளிர்ந்தவர்கள். உடம்பு, தன்னலம் ஆகியவற்றைக் கடந்தவர்கள் போலவும் ஆன்மநிலையை அடைந்த ஞானிகள் போலவும் அவர்களது வாழ்க்கை அமைந்திருந்தது.

இருவேறு துறைகளில் அவர்களது செயல்பாடுகள் அமைந்திருந்தன. நிதிசேகரிப்பு, பொருட்சேகரிப்பு என்ற ரீதியில், குருவிபோல் மணிமணியாக சேர்த்து தாயகத்திற்கு அனுப்பும் ஆர்வம் நாதனிடம் இருந்தது. காற்று நுழைய முடியாத இடங்களுக்கும் சென்று திரும்பும் லாவகம் அவனுடையது. எதனையும் சாதித்து முடிக்கலாம் என்ற தன்னம்பிக்கை அவனிடம் நிறையவே இருந்தது. போராட்ட வளர்ச்சியில் அவனது பங்கு கணிசமானதென்றே குறிப்பிடலாம்.,

மனச்சிறையை உடைத்துக் கிளம்பிய எழுச்சியுடன் கஜன் செயற்பட்டதை அவதானிக்க முடிந்தது. கவிதை எழுதல், நிதிசேகரிப்பு போன்ற செயல்பாடுகளில் சுதந்திரதாகத்துடனும் இயக்க விசுவாசத்துடனும் செயல்பட்டு வந்தவன்தான். ஆயினும், அண்மைக்காலமாகவே, அவனது வளர்ச்சி பன்முகப்பரிமாணங்களில் தோற்றம் கண்டது. பத்திரிகை ஆசிரியனாக, எழுத்தாளனாக, விமர்சகனாக, நாடக நடிகனாக, இயக்குனனாக, புகைப்படம் பிடிப்பவனாக பல்துறைகளில் அவனது விகசிப்புக் காணப்பட்டது. விமர்சனங்களுக்கு அஞ்சாமல் சரியென மனதுக்குப் பட்டதை செய்யும் மனதிடம் அவனிடம் இருந்தது. ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர்களை ஒருங்கிணைத்தல் வேண்டும்; தமிழ்நாட்டு எழுத்தாளர்களோடு 'பாலம்' அமைத்தல் வேண்டும்; ஏராளமான நூல்களை வெளியிடல் வேண்டும் என்ற எத்தனையோ கனவுகளைச் சுமந்தவனாக, எமது மக்களின் அரசியல், சமூக விடுதலை குறித்த பிரக்ஞை உள்ளவனாக விளங்கினான்.

இவர்கள் இருவரினதும் நினைவுகள் அடிக்கடி எம் மனங்களில் எழுகின்றன. வெற்றிடம் ஏற்பட்டது போன்ற ஏக்கமும் ஏற்படுகின்றது. ஆன்ம விடுதலை பெற்ற கர்மவீரர் போல், புயலைப் போல் இயங்கிய அவர்களை வீழ்த்தி விட்டதாக எதிரி நினைத்துக் கொள்வான். ஆனால் புயலைச் சாய்த்தல் முடியாது. அது ஒவ்வோர் மனங்களிலும் அடித்துக் கொண்டே இருக்கும். புயல் காற்றினால் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு விடுதலையாக முழுமை பெறும்.

— திலகர்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# விடுதலையின் விருட்சங்கள்

எம்மோடு, தோழோடு தோழாய், உழைத்து நின்ற இரு ஆலமரங்கள் சரிந்து விட்டன.

விடுதலை இயக்கச் செயற்பாடுகளில் எப்போதும், எங்கும் துடிப்போடும், வேகத்தோடும் அல்லும் பகலும் அயராது உழைத்தவர்கள். எமது பணியகச் செயற்பாடுகள் பல்கிப் பெருகி வளம் காண அவர்கள் நீர் இறைத்தவர்கள். எமது மண் விடிய வேண்டும் என்பதற்கான குரலை அவர்கள் ஓங்கி ஒலித்தவர்கள். தோப்பிழந்த குயில்களின் தோப்பில் விடுதலைப் பண் இசைத்த ஆன்மக் குயில்கள். இவர்களின் ஆன்ம ராகம் எவ்வேளையும் இசைத்துக்கொண்டிருக்கின்றது. எம்மையெல்லாம் எந்நேரமும் எழுப்பி விடுகின்ற அந்தக் கீதத்தை காற்று ஏந்தித் திரிகிறது.

எங்களின் இந்த தோழர்கள் வலிய நெஞ்சினர். உறுதியும் உரமும் கொண்டவர். எதற்கும் அஞ்சிடாப் போர்வீரர். சொந்தச் சகோதரர் துன்பத்தில் சாதல்கண்டு சகியாதவர். தாய்நிலம் செழிக்க தம் வாழ்வை அர்ப்பணித்தவர்கள். புலம் பெயர்ந்த தீராத வலியில் அவர்கள் உள்ளம் அழுதது. என்றாவது ஒருநாள் எமது மண்ணில் எழும் சூரியஉதயத்தைப் பார்த்துவிடவேண்டுமென்று ஆசையோடு இருந்தவர்கள்.

ஊருக்கு ஒரு நாள் திரும்புவோம் என்பது அவர்களின் கனவும் வாழ்வுமாக இருந்தது. இதுவே அவர்களின் இதய ஒலியோடு இணைந்து சத்தமிட்டது. இந்தச் சத்தத்தை, இந்தக் கனவை, இந்த வாழ்வை கொண்டிருந்த இரு தோழர்களை நாம் இழந்துவிட்டோம். எதிரியின் நயவஞ்சகச் செயல் இவர்களை எம்மிடமிருந்து பிரித்துவிட்டது. ஆனால், இவர்கள் எமக்குத் தந்த உணர்வும் வேகமும் எம்மை இவர்களின் இலட்சியத்தை நோக்கி இயங்கவைக்கிறது. இந்த வீரர்களின் நினைவோடு அவர்கள் கொண்ட தாகத்தையும் விடுதலை வேட்கையையும் வேகத்தையும் வீச்சையும் அணிந்து கொண்டு புதிது புதிதாய் புயல்கள் முளைக்கும். யாருக்கும் அஞ்சாத நெஞ்சுரம் படைத்த புலிவீரர்களான நாதனும், கஜனும் வாழ்ந்த விடுதலை வாழ்க்கை அழிந்துவிடாது. மாவீரர்களான அவர்களின் வாழ்க்கை சதா கண்ணெதிர்பட்டு அகதியுக மனிதர்களின் வாழ்வுக்கு ஒளிதீபம் ஏற்றும்.

பிரெஞ்சுப் பணியகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# விடுதலைக் கிராமத்தின் வீரர்கள்

செம்மண் கிராமங்களில்
கிளர்ச்சியோடு எழுகின்ற சூரியனின்
கதிர் கீற்றுக்கள் ஒடிந்து போனதாக
நகரில் வாழும் மக்கள் அழுகின்றார்கள்.

கட்டிடக் காடதிர
நடந்த புயல்களின் சுவட்டோசை
தங்களினதும்
தங்கள் குழந்தைகளினதும்
துயிலைக் கலைத்து விட்டதாகச் சொல்கிறார்கள்.

இதனால்
அவர்கள் இறந்து போய்விட்டார்கள் என்பதை
மக்கள் ஒரு போதும் நம்புவதற்கில்லை.

ஆம் அவர்கள் திடமாகச் சொல்கிறார்கள்
வீரர்கள் அழிவில்லாதவர்கள் என்று.
அதற்கு அவர்களிடம்
நிறைய சாட்சியங்கள் இருக்கின்றன.

வாளேந்தியபடி குதிரையில் நிற்கும்
செப்புச் சிலைகளில் வார்த்த
போர்வீரனின் சாயலை ஒத்த
வீரர் இருவரினதும் சாயலில்
புதிதாய் வீரர்கள் பிறப்பதற்கான துடிப்பை
தாங்கள் காண்கிறதாக சத்தியம் செய்கிறார்கள்.

சுழியோடிகளாகவும்
மீட்கும் தகமையுள்ளவர்களாகவும்
வழக்காடுபவர்களாகவும்
போர்வீரர்களாகவும் இருந்த இவர்கள்
பனிக்கட்டிகளிலான வீடுகள்
உடைந்து சரிவதற்கு முன்னால்
விடுதலைப் படகில் ஏற்றி
எங்களுக்கானதொரு வீட்டில்
சேர்க்கத் துடியாய் துடித்ததை
மக்கள் நன்றியோடு நினைவு கூர்கிறார்கள்.

பனிக்கட்டி வீடுகள் கரையும்
அந்நிய நிலங்களில் பறி போன எம்வாழ்வு
முடங்கித் தொலையும்.
நிலவும், சூரியனும் இழந்த
புதிய வானத்தின் கீழ்
அகதி மனிதர்களின்
துயரிசைப் பாடல் ஓங்கும்.

நிலவு, வானம், சூரியன், தாய்நிலம், காற்று
அகதி மனிதர்கள், மரங்கள் யாவுமே
துயரிசைக்கின்றன.

மண் சுமந்த தோழர்கள்
துயரை வெல்லமீட்டிய கானம்
உளத்தை அசைக்க,

மக்கள்
விடுதலைக் கிராமத்துக்குச்
செல்வதற்கான வழியை
ஆர்வத்துடன் கேட்கிறார்கள்.

– சுபா
(06.11.96)

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive




தமிழீழ விடுதலைப் புலிகளின்
அனைத்துலக நிதிப் பொறுப்பாளர்

# லெப். கேணல் நாதன்

கந்தையா பேரின்பநாதன்

அரியாலை

பிறப்பு: 10.11.1964

Tamileelam Archive



தமிழீழ விடுதலைப் புலிகள்
பிரெஞ்சுக் கிளையின் உறுப்பினர்,

# ஈழமுரசு ஆசிரியர் கஜன்

கந்தையா கஜேந்திரன்
கோண்டாவில்
பிறப்பு: 17.04.1966

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# எங்களின் மூச்சில் உங்களின் காற்று

இயந்திர வாழ்வின்
இறுக்கமும் இரைச்சலும்
வாழ்க்கைச் சக்கர
நெரிசலின் நசிவும்
போர்த்திய மாயப் பொய்வலை உள்ளும்
விடுதலைப் பண்ணை செவிகள் சுவைத்தன.
உயிரின் பாடலை உள்ளம் இசைத்தது.

இங்கும் இதற்கு முடிந்தது இவர்களால்

குளிரின் காற்றில் உதறிடும் கூதலில்
தேகம் வியர்த்திட உள்ளம் எரிந்தது.
நாட்டு நினைப்பு!
தேசம் பற்றிஎரிகின்ற நேரத்தின் தவிப்பு!!

சிட்டுக்குருவிபோல் எங்கும்
கொத்திச் சேர்த்த குறுமணிதன்னை
பொத்திப் பொத்தி சேர்விடம் சேர்த்த செயலாளன்.
பூமிப்பந்தின் இங்கும் அங்கும்
சுற்றிப்பறந்து பொருளினைச் சேர்த்த விடுதலைச்
சிட்டு.
திரைகடல் ஓடித்
திரவியம் சோர்வுறாப் பணியாளன்.

நாமும் நம்மிடையுள்ள யாவும்
நாட்டுவிடுதலை நாட்டிடவென்றே
நாட்டி நின்றவர்.

எழுத்தும் பேச்சும்
ஆக்கமும் ஊக்கமும்
நம்மிடை உள்ள ஆற்றலும் உழைப்பும்
யாவும்... யாவையும்
விடுதலை வேட்டடமே என்றுரைத்த

விடுதலைச் சிட்டுக்கள்
உயிர்க்கொல்லி பார்வையில்
விடுதலைப் பட்சிகள் எப்படிச் சிக்கின..?
கடல் தாண்டி நீண்ட நாசக்கரம்
ஆழவேரோடி நீர்தேடித்தந்த
ஆதாரவேர்களை அறுப்பதென்பது
எப்படிச் சாத்தியம்...?

நேற்றும் எம்மோடு
தோழமை கொண்ட விழிகள்
மூடிக்கிடந்தன.
எங்களின் விழிகளில் கண்ணீர்
நெடுங்கிடையாய் கிடைந்த தேகம் கண்டு
நெஞ்சை அழுத்திச் சோகம் அழுதது.
ஏன் இப்படி..? எதற்காக.?

விம்மிவெடித்து..
உள்ளிளுத்த மூச்சில்
உங்களின் சுவாசம்! வாசம்!!

ஒன்று விழ ஒன்பதாய் எழும்
விடுதலைக்களத்தில் புதைந்த விதைகளே!

உங்களின் நினைவு தாங்கி
எதிரியின் இதயம் வலிக்க உரைக்கின்றோம்.
விடுதலை விருட்சம் வீழ்ந்து விடாது!
இன்னும்... இன்னும் அது
கடினபாறைகளை ஊடறுத்துக்கொண்டு
வேர்விடும்!
பீறிட்டெழும் நீரின் மிகையால்
இன்னும்... இன்னும் அது செழிப்புறும்!!!

— [illegible] (05.11.96)



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# உனது பேனா எழும்

அற்புதமான கவிதை
அருமையான விமர்சனம்
உன்னதமான ஆளுமை
கருத்தோவியம் — கலைப்படைப்பு...
எல்லைகளைக்கடந்த
மனித நேசிப்பு
விடுதலைச் சிறகினை
அகல விரித்து
மனித மனங்களையெல்லாம்
வென்றிடத்துடித்த மனசு
எல்லாவற்றையும்
ஒரு நொடிப் பொழுதில்
இழந்து போனோம்
கஜன் 'இல்லாமை' இருள்
எம்மை சூழ்ந்தபடியும்..
தினமும் சாதல் போலவும்...
கண்ணீர்.... புலம்பல்...
உன்னுடைய எதிரியென்று
எங்களுக்குத் தெரியும்
ஆனாலும்
எங்களால் முடியவில்லை
நீ பேனாவையே யாசித்தவன்
துப்பாக்கியை அல்ல
கருத்துக் களத்திலே
எவனையும் சந்திக்க
அஞ்சியவன் அல்ல

எந்தக் கயவனின் குண்டு
உன் மீதில் பாய்ந்தது?
அன்பானவனே!
உன்னை
சாகவிட்ட தவிப்பு
எமக்குள்
புது விதையை
முளைக்கச் செய்துள்ளது
உனது பேனா
புத்துயிர்ப்போடு
மீண்டும் எழும்.

**நிலவன் (08.11.96)**



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# தமிழின விடுதலையை நசுக்க முனையும் எதிரியின் சதிச்செயலை இனம் காண்போம்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் சர்வதேசப் பரிமாணத்தை குலைத்துவிடும் சிறீலங்கா அரசின் நோக்கம், மனிதப் படுகொலைவடிவம் எடுக்கத் தொடங்கிவிட்டது. தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவான வகையில், அனைத்துலக ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வரும் ஆதரவுச் செயற்பாடுகளை மடக்கி விடுவதற்கு சிறீலங்கா அரசு பகீரத முயற்சிகளை எடுத்து வரும் இன்றைய காலகட்டத்தில், பாரிஸ் நகரில், 26.10.96 அன்று மாலை 6.50 மணியளவில், எமது இரு முக்கிய செயற்பாட்டாளர்கள் இனம்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். விடுதலைப் போராட்டத்தை நசுக்கி விடுவதற்கு வகுக்கப்பட்டுள்ள நாசகாரத்திட்டத்தின் ஓர் அம்சமாகவே இச்சம்பவத்தையும் நாம் நோக்க முடியும்.

சிறீலங்கா அரசின் பின்னணியுடனேயே மேற்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய இப் படுகொலைகள் இரு முக்கிய செயற்பாட்டாளர்களை நோக்கி குறிவைத்ததாக இருக்கின்றன. இவ் இலக்குகள் மிகவும் திட்டமிட்ட முறையில் தேர்ந்தெடுக்கப் பட்டவையாகவும் இருக்கின்றன. எமது இயக்கத்தின் சர்வதேச நிதிப் பொறுப்பாளரான திரு. கந்தையா பேரின்பநாதன் (நாதன்), ஈழமுரசுப் பத்திரிகை ஆசிரியர் திரு. கந்தையா கஜேந்திரன் (கஜன்) ஆகியோரே திட்டமிட்ட முறையில் படுகொலைசெய்யப்பட்டவர்களாவர்.

எமது இயக்கத்தின் சர்வதேசச் செயற்பாடுகளில் 1984ம் ஆண்டு முதல் முழுநேர உறுப்பினராக இருந்து இயங்கிவந்த திரு. கந்தையா பேரின்பநாதன் (நாதன்) சர்வதேச வேலைகளில் சில முக்கிய பொறுப்புக்களைச் சுமந்து நின்றவர். பல்வேறு காலகட்டங்களில் இயக்கம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்ட காலங்களில் எல்லாம் உற்சாகத்துடன் இயக்கப்பணிகளில் ஈடுபட்டவர். பல்வேறு நாடுகளின் மூலை முடுக்குகளெல்லாம் அலைந்து திரிந்து, எமது மக்கள் விடுதலை அடைய வேண்டும் என்ற அவாவுடன் அரும்பணியாற்றியவர். இவரது செயற்பாடுகள் எமது தாயக பூமியிலே எமது போராளிகளும் மக்களும் கண்ட பல வெற்றிகளுக்குப் பெரிதும் உறுதுணையாக இருந்து வந்தது.

திரு. கந்தையா கஜேந்திரன் (கஜன்) விடுதலைப் புலிகளின் பிரெஞ்சுக் கிளையின் முக்கிய செயற்பாட்டாளராக நீண்டகாலமாக இயங்கி வந்தவர். கலை, இலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடுகொண்டவர். தமிழ் மக்கள் மத்தியிலான அரசியல் வேலைகளிலும் கலை இலக்கிய முயற்சிகளிலும் உற்சாகமாக இயங்கி வந்தவர். 1995ம் ஆண்டு தை மாதம் 'ஈழமுரசு' என்னும் பத்திரிகையை ஆரம்பித்து,

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அதன் ஆசிரியராகவும் இருந்து பத்திரிகையின் வளர்ச்சிக்கு அயராது உழைத்து வந்தவர்.

இப் படுகொலைகளின் பின்னால் என்ன நோக்கம் இருந்திருக்கக்கூடும்?

தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை நசுக்கி விடுவதற்கு, போராட்டத்திற்கு வெளிநாடுகளில் வசிக்கும் தமிழ் மக்கள் மத்தியில் இருந்து கிடைத்து வரும் நிதிப் பங்களிப்பினைத் தடைசெய்வது அவசியம் என்பது எதிரியின் முக்கிய அவதானிப் பாக இருந்து வந்துள்ளது. போராட்டத்திற்கான இந் நிதிப்பலம் எதிரியின் இராணுவ ஆக்கிரமிப்பினை முறியடிப்பதற்கு அவசியமான தமிழர் படையணியின் பலத்தினை அதிகரிப்பதற்கு அவசியமானதாகவும் இருந்து வருகின்றது. போராட் டத்திற்கு இத்தகைய நிதிப்பலம் சென்றடைவதற்கு சர்வதேச நிதிப் பொறுப்பா ளராக இயங்கி வந்த நாதனின் பணி முதுகெலும்பு போன்றது. இந் நிதிப்பலம் போராட்டத்தினைச் சென்றடைவதைத் தடுப்பதற்காக மக்கள் போராட்டத்தின் வெற்றிக்காக மனமுவந்து அளிக்கும் பங்களிப்பினை, பயமுறுத்திச் சேகரிக்கப்படும் நிதியாகச் சித்தரிப்பதற்கு சிறீலங்கா அரசு தீவிர முயற்சிகளை எடுத்து வருகிறது. இம் முயற்சிகள் வெற்றியளிக்காத சூழலில், போராட்டத்திற்குச் சென்றடையக் கூடிய நிதியினைத் தடுப்பதற்கு சர்வதேச நிதிப்பொறுப்பாளரான நாதன் மீது குறிவைக்கப்பட்டதாக நாம் உணரமுடியும்.

ஈழமுரசு பத்திரிகை ஆசிரியராக பணிபுரிந்த திரு. கஜன் புலம்பெயர்ந்த நாடுகளிலுள்ள பல்வேறு தமிழ் எழுத்தாளர்கள், கலைஞர்கள் மத்தியில் இருக் கக்கூடிய சில கருத்து வேறுபாடுகளை ஆரோக்கியமான கலந்துரையாடல்கள் மூலம் வெற்றிகொண்டு; ஈழமுரசு பத்திரிகையினூடாக அவர்களையும் விடுதலைப் போராட்டத்துடன் இணைத்து வந்தவர். பாலம் என்னும் சஞ்சிகையின் மூலம் மக்கள் பிரச்சினைகளுடன் இணைந்து நின்றவர். வெளிநாடுகளில் வாழுகின்ற தமிழ் மக்களைப் போராட்டத்தோடும், தாயக நினைவுகளோடும் இணைத்து வைப்பதற்கு இவர் ஆற்றி வந்த பங்கு அளப்பரியது. இவை போதாதா எதிரி இவர் மீதும் குறி வைப்பதற்கு?

இவர்களைக் கொன்றொழித்து விடுவதன் மூலம் இவர்கள் ஆற்றி வந்த பணிகளை முடங்கச் செய்வது மட்டுமன்றி தமிழீழ விடுதலைக்கு ஆதரவு வழங்கி வரும் தமிழீழ மக்கள் மத்தியில் பதட்டத்தினையும் பயப்பீதியினையும் குழப்பத்தினையும் உண்டுபண்ணி, போராட்டத்தின் சர்வதேச செயற்பாடுகளை பாதிப்புறச் செய்யும் சதித்திட்டம் இச்சம்பவத்தின் பின்னால் உள்ளது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் சர்வதேச பரிமாணம் முடக்கப்படுமானால், போராட்டத்தினை நசுக்கி விடுவது இலகு என்ற சிந்தனையுடன் செயற்பட்டு வந்த அரசு, இச்சம்பவத்துடன் தொடர்புபட்டதாக இருக்கும் என்பது இலகுவாகப் புரிந்துகொள்ளக்கூடிய ஒரு விடயமே. மற்றும் எமது தாயக பூமியிலே சிறீலங்கா அரசின் நடவடிக்கைகளால் எமது மக்கள் படும் சொல்லொணாத் துயரங்களை, சர்வதேச மயப்படுத்துவதற்காக, சர்வதேச தமிழர் சம்மேளனத்தால் *30.10.1996* முதல் *05.11.1996* வரையிலான காலப்பகுதிக்குப் பிரகடனப்படுத்தப்பட்ட 'அனைத்துலகக் கவனஈர்ப்பு வாரத்'திற்கான முன்னேற்பாடுகள் உற்சாககரமாக

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நடைபெற்று வந்த இந் நேரத்திலேயே இப்படுகொலைகளும் இடம்பெற்றுள்ளன என்பதுவும் கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய ஒன்று.

இப்படுகொலைகளை வெளிநாடுகளில் வாழும் தமிழ்மக்கள் ஒரு சவாலாகவே எடுத்துக்கொள்ள வேண்டும். இச்சம்பவத்தினால் உணர்ச்சிவசப்பட்டு தேவையற்ற விதத்தில் கொதித்து எழுவதோ அல்லது ஒருவித பய உணர்வுடன் ஒதுங்கிக் கொள்வதோ இப்படுகொலைகளைத் திட்டமிட்டு நடாத்தியவர்களின் நோக்கித்திற்குத் துணைபுரிவதாக அமைந்துவிடும். இதனால் எமது மக்கள் நிதானமாகவும் அதேநேரம் மிகவும் விழிப்புணர்வுடனும் இருக்கவேண்டும். எத்தகைய அழுத்தங்களையும் எதிர்கொண்டு முன்னேறும் எமது மக்களின் விடுதலைப் போராட்டத்தின் சர்வதேசச் செயற்பாடுகளுக்கு எதிரி போட முனையும் அனைத்துத் தடைகளையும் உடைத்து, எமது மக்களுக்கான சர்வதேச பலத்தினையும் நாம் அளிப்போம் என்பதில் உறுதிகொள்ள வேண்டும்.

எமது அன்புக்குரிய இருவரையும் இழந்த சோகம் எம் நெஞ்சில் ஆழமாகப் பொதிந்திருப்பினும், வாடிநின்று வேதனையாகத் துவண்டு விடுவதால் பயன் ஏதும் வரப்போவதில்லை. இவ் இருவரும் எந்த இலட்சியத்திற்காக அயராது உழைத்தார்களோ, எந்நோக்கத்திற்காக தமது உயிர்களை அர்ப்பணித்தார்களோ அதற்காக தளராத உறுதியுடன் உழைப்பதே இவர்களுக்கு நாம் செய்யும் உண்மையான அஞ்சலியாக இருக்கமுடியும்.

“புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்”

வெளியீடு:
அனைத்துலகச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வெளியீடு: அனைத்துலகச் செயலகம் - தமிழீழ விடுதலைப் புலிகள்